**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் நாள் புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(2)ன்கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|
| | | 36)மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி செயல்படும் தமிழக அரசு தாக்கல் செய்த 2015–2016ஆம் ஆண்டிற்கான வரியில்லா பட்ஜெட் மற்றும் ரூ 650 கோடிக்கு வரிச்சலுகைகள் அறிவித்தமைக்கு இம்மாமன்றம் தனது நன்றியை தெரிவிக்கிறது. |

| | | |
|---|---|---|
| | | 37) தமிழக மக்களின் நலனில் மிகுந்த கரிசனையுடன் செயல்பட்டு வரும் மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் கோடை காலத்தின் பாதிப்பில் இருந்து பொதுமக்களை காத்திடும் வகையில் தமிழகமெஙகும் தண்ணீர் பந்தல்களை திறந்திடுமாறு அறிவித்தமைக்கு இம்மாமன்றம் தனது நன்றியை தெரிவிக்கிறது. |
| | | 38)இன்று (25.3.2015) நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர் திரு.ச. சுரேஷ்குமார் மாமன்ற கூட்டப்பொருளை கிழித்தெரிந்து மாமன்ற கூட்டத்திற்கா |

| | | |
|---|---|---|
| | | ன பாரம்பரிய மரபுகளை மீறியதுடன் மாமன்ற உறுப்பினர்களிடையே தேவையற்ற பதட்டத்தை ஏற்படுத்தியதால் மேயருக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மேற்படி மாமன்ற உறுப்பினரை இன்றிலிருந்து அடுத்து வரும் ஒரு மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருக்க தற்காலிகமாக நிறுத்தி வைக்க தீர்மானிக்கப்பட்டது. |
| 25.3.15 | **1)**தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் கடந்த நவம்பர் மாதம் பெய்த மழையினால் தாமஸ் நகர் மற்றும் லயன்ஸ் டவுண் 7ம் நிர் தெரு மற்றும் 4ம் நிர் தெரு பகுதிகளில் தேஙகியிருந்த மழைநீரை அப்புறப்படுத்த அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ. 84,096/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>ம.ப.<br>1504/2014/15 | 39)பதிவு செய்யப்பட்டது |
| | **2)**தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலம் வார்டு எண். 48, 49, 50 பகுதிகளான அமுதா நகர், சக்தி நகர், கணேசன் காலனி, கால்டுவெல் காலனி, மூன்று செண்ட், எம்.ஜி.ஆர். நகர் ஆகிய பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை காரணமாக மழைநீர் தேஙகி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இடையூறாக இருந்ததையொட்டி மேற்படி மழைநீரை ஆயில் இஞ்சின் கொண்டு அப்புறப்படுத்த அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 77,903/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். ம.ப. 118A/2014– | 40)பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 15 | |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் லெவிஞ்சிபுரம் பகுதியில் பகிர்மானகுழாய் அமைக்கும் பணி செய்வதற்கு குடிநீர் அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 48,782/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். ம.ப. 157/2014/15 | 41) பதிவு செய்யப் பட்டது |
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகம் மற்றும் தங்கம்மாள்புரம் பள்ளியில் மழைநீர் சேகரிப்பு பணி செய்வதற்கு அவசர அவசியம் கருதி மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 12,230/– செலவு செய்ததது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். ம.ப. 81/2014/15 | 42)பதிவு செய்யப் பட்டது |
| | 5)இம்மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட ரோச் பூங்கா பராமரிப்பு மற்றும் அங்கு நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு அரசாணை எண். 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன் படி மூன்றாண்டு தொகுப்பு (2012–2015) அடிப்படையில் உரிமம் வழஙகப்பட்டுள்ளது. மேற்படி உரிமம் காலம் 31.03.2015ல் நிறைவு பெறவுள்ளதால் மீண்டும் 01.04.2015 முதல் 31.03.2018 வரை மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடத்தவும் இவ்வகைக்கு ஏற்படும் செலவினஙகளுக்கும் இம்மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ16/10416/2014 | 43)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | 6)தூத்துக்குடி மாநகராட்சி பகுதிக்கு குடிநீர் வரும் இரண்டாவது பைப் லைன் ராசாஙகுளம் அருகில் உடைப்பு ஏற்பட்டதை குடிநீர் அவசர அவசியம் கருதி உடனே சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 58,974/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம். மு.ப. 178 A/2014–2015 | 44) பதிவு செய்யப் பட்டது |
| | 7)தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்கள் 3,5,17,18,34,48,49,54,55,57 ஆகிய பகுதிகளில் தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 18.04.2015உடன் குப்பை அள்ளும் பணி முடிவடைகிறது. தொடர்ந்து மேற்படி வார்டு பகுதிகளில் துப்புரவு பணிகள் மேற்கொள்ளுவதற்கு 3 வருட காலத்திற்கு தனியார் மூலம் குப்பை அள்ளும் பணிக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கும் இதற்கு முதலாம் ஆண்டிற்கு ஆகும் தோராய செலவீனம் ரூ 180 இலட்சத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகறிது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் 3 ஆண்டுகளில் தனியார் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம். நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ள நிபந்தனையின்படி ஒப்பந்தப்புள்ளி கோரலாம். மேலும் முதல் வருடத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை அனுமதிக்கலாம்.<br><br>எச்1/163/2015 | 45)அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | 8)இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனஙகளுக்கான ( D &O) உரிமக் கட்டணம் 1996ம் ஆண்டிற்கு பிறகு தற்போது மாமன்ற | 46)அலுவலகக் குறிப்புப்படி |

| | | |
|---|---|---|
| | தீர்மானம் 148 நாள் 28.11.2014ன் படி திருத்தியமைக்கப்பட்டு 2015–2016ம் ஆண்டுக்கான உரிமக்கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. மாநகராட்சி சட்ட விதிகளின்படி நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 45 நாட்களுக்கு முன்னதாக கட்டணத்தொகை வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த நிதியாண்டில் பல புதிய வர்த்தக நிறுவனங்கள் சேர்க்க வேண்டியுள்ளதால் இந்த ஆண்டு அச்சம் மற்றும் அருவருக்கத்தக்க இனஙகளுக்கான கட்டணத் தொகையினை 31.03.2015ம் தேதி வரை அபராதமின்றி வசூல் செய்வதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்219992/14 | அனுமதிக்கப்பட்டது |
| | **9)**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் 60 வார்டுகளில் சில வார்டுகள் கடற்கரை பகுதிகளையும் சில வார்டுகள் விவசாய பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது. மேற்படி பகுதிகளில் கொசு உற்பத்தி அதிகமாகும் நிலை உள்ளதால் சிக்குன்குனியா, டெஙகு காய்ச்சல் பரவலாக பரவி வருகிறது. எனவே மேற்படி நோய்கள் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமான பணியாகும். எனவே மாநகராட்சியிலுள்ள 60 வார்டு பகுதிகளுக்கும் சென்று கொசுப்புழுக்களை ஒழிக்கக்கூடிய Bacillus Thuringiensis Var Israelensis மற்றும் Phrethrum Extract 2 % மருந்தினை தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தின் உத்தரவுப்படி அனுமதி பெற்ற Biotech International மற்றும் M/s. Paramount Pesticides Ltd. Chennai நிறுவனத்தின் மூலம் அவசர அவசியம் கருதி வாஙகிய வகைக்கு ரூ 14,62,476/– னை பொது நிதியிலிருந்து செலவு செய்ததை மாமன்றம் அனுமதிக்க வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | **47)** அலுவலக குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது |
| | **10)**தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதிகளில் 60 வார்டுகளில், சில வார்டுகள் கடற்கரை பகுதிகளையும் சில வார்டுகள் விவசாய பகுதிகளையும் உள்ளடக்கி உள்ளது. மேற்படி பகுதிகளில் கொசு உற்பத்தி அதிகமாகும் நிலை உள்ளதால் சிக்குன்குனியா, டெஙகு காய்ச்சல் பரவலாக பரவி வருகிறது. எனவே மேற்படி நோய்கள் பரவா வண்ணம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது மிக அவசியமான பணியாகும். மேலும் ஏற்கனவே பெறப்பட்ட கொசு ஒழிப்பு மருந்துகள் 4 மாதஙகளுக்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. வரும் நிதியாண்டில் மேலும் கொசு ஒழிப்பு மருந்துகளான Bacillus Thuringiensis Var Israelensis மற்றும் Phrethrum Extract 2% தேவைப்படுவதால் அதனை வாஙகுவதற்கு அனுமதியும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ 50.00 இலட்சத்தினை பொது நிதியிலிருந்து செலவு செய்வதற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம். எச்2/7958/13 | **48)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | **11)**தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 51 ஊரணி ஒத்தவீடு பகுதி மற்றும் வார்டு எண். 58 முள்ளக்காடு திருச்செந்தூர் சாலை ஆகிய பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் சேதமடைந்து மேற்படி பகுதி மக்களின் குடிநீர் விநியோகம் பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து மேற்படி குடிநீர் விநியோக குழாய்களை குடிநீர் அவசர அவசியம் கருதி மாற்றியமைத்து குடிநீர் விநியோகம் சீரமைக்க மாநகராட்சி விதி எண். 15ன் கீழ் ரூ 1,41,783/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம். மதிப்பீடு எண். 178/14–15 | **49)** பதிவு செய்யப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **12)**தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் பராமரிப்பில் உள்ள பாளைரோடு பகுதியில் மழை காலஙகளில் சாலைகளில் நீர் தேஙகி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் மாணிக்கம் டவர் முதல் ஜெயராஜ் ரோடு வரை மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் நடைபாதை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ **31,00,000/–** மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். மதிப்பீடு எண். **195/14–15** | **50)** அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது |
| | **13)**தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் பராமரிப்பில் உள்ள பாளைரோடு பகுதியில் மழை காலஙகளில் சாலைகளில் நீர் தேஙகி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் மணி நகர் முதல் மாணிக்கம் டவர் வரை மழைநீர் வடிகால் சிறுபாலம் மற்றும் நடைபாதை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ **38,50,000/–** மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். மதிப்பீடு எண். **197/2014–2015** | **51)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **14)**தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலம் பராமரிப்பில் உள்ள பாளைரோடு பகுதியில் மழை காலஙகளில் சாலைகளில் நீர் தேஙகி பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக இருப்பதால் விவிடி சாலை சந்திப்பு முதல் மணி நகர் வரை மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் நடைபாதை அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ **40,00,000/–** மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். மதிப்பீடு எண். **194/14–15** | **52)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **15)**நகராட்சி நிர்வாக இயக்குநரின் ஆணைப்படி தூத்துக்குடி மாநகராட்சிக்குப் பாத்தியப்பட்ட சொத்துகளில் தொழில் செய்து வரும் உரிமம்தாரர்கள் மூன்று வருடஙகளுக்கு ஒரு முறை ரூ **1000/–** செலுத்தி கணினியில் பதிவு செய்த பின்னரே உரிமத்தை நீட்டித்து வழஙகும் நடைமுறை இருந்து வருகிறது. இதிலிருந்து விலக்கு அளிக்கும் விதமாக தூத்துக்குடி மாநகராட்சி கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் சத்துணவு மையஙகள் ஏழை எளிய குழந்தைகள் பயன்பெறும் வகையில் அரசின் உன்னததிட்டமான ஊட்டச்சத்தும், குறைவில்லாத சுகாதாரம் மற்றும் முன் பருவக்கல்வி திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந்த அஙகன்வாடி மையஙகள் வியாபார நோக்கத்திற்காக நடத்தப்படும் ஸ்தலமில்லாததால் இதை சிறப்பினமாக கருதி உரிமம் புதுப்பிக்க மூன்று வருடஙகளுக்கு ஒரு முறை செலுத்தவேண்டிய உரிமம் தொகை ரூ.1000/–ம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு–** மாமன்றம் அனுமதிக்கலாம். அ**16/050/12** | **53)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **16)**நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண். IT -5163/03 நாள் **23.11.2006** மற்றும் கடித எண். ந.க. IT -1- 26603/08 நாள் **28.4.2009**ல் மாநகராட்சிகளில் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை (Information Technology Personnel) பணி நியமனம் மேற்கொள்ளவும் மாநகராட்சிகளில் மின்னனு மேலாண்மை (E.Governance) பணிகளை திறம்பட கவனித்தல் மற்றும் அனைத்து பணிகளையும் கணினி மூலம் ஒருஙகிணைத்து கவனித்தல் போன்றவற்றிற்கு, கணினி வல்லுநர்களை நியமனம் செய்திட பணி விதிகள் | **54)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

உருவாக்கப்பட்டு வருகிறதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி பணியமைப்பு அரசாணை எண். 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (தேர்தல்) துறை நாள் 26.09.1996 பணி விதிகளில் கணினி சம்பந்தப்பட்ட பணியிடங்களான 1 பகுப்பாய்வர் (System Analyst) 2.திட்டகணினி அமைப்பாளர் (Programmer) 3, உதவி திட்ட கணினி அமைப்பாளர் (Assistant Programmer) 4. புள்ளி விவரப் பதிவாளர் (Data Entry Operator) போன்ற பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை.

தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் அடியிற்கண்ட பணிகள் மற்றும் இதர பணிகளை கணினி மூலம் பராமரிப்பு செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது.

1.அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது பணி விவரஙகள்
2.சொத்து வரி, குடிநீர் கட்டணம், தொழில் போன்ற வரி இனஙகள் மற்றும் வரியில்லா இனஙகள் வசூலித்தல்
3.பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் வழஙகுதல்
4.அலுவலர்கள் மற்றும் பணியாளர்களது வருஙகால வைப்பு நிதி மற்றும் சிறப்பு சேமநலநிதி பதிவுகள் மற்றும் பராமரிப்பு
5. கடன்கள், முதலீடுகள் மற்றும் முன்பணஙகள் பதிவுகள் மற்றும் பராமரிப்பு
6.தெருவிளக்கு பராமரிப்பு பணிகள்
7.சத்துணவுத்திட்ட செயல்பாட்டு பணிகள்
8.இணையதளம் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் நடவடிக்கை பணிகள்
9அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார திட்டஙகள் (போலியோ மற்றும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு திட்டம் மற்றும் இதர திட்டஙகள்)
10.பாதாள சாக்கடை திட்டம்
11. இணையதளம் வாயிலாக மாநகராட்சியின் அனைத்து சேவைகளும் பொது மக்களுக்கு வழஙகுதல்
12. இணையதளம் வாயிலாக பெறப்படும் மனுக்களுக்கு நடவடிக்கை எடுக்கும் பணிகள்.
13. நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் அரசு துறைகளுக்கு பணி தொடர்பான உரிய நடவடிக்கை விபரம் மற்றும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகள்
14. கணினி மூலம் வரவு செலவு கணக்குகள் மற்றும் இதர கணக்குகள்
15. நகரமைப்பு பிரிவில் செயல்பாட்டு பணிகள் கட்டிட வரைபடஙகள் ஒப்புதல் மற்றும் உரிமம் கணினி வாயிலாக செயல்படுத்துதல்,
16. தணிக்கை பிரிவின் வாயிலாக அறிவுறுத்தப்படும் அறிக்கைகள் கணினி முலம் மேற்கொள்ளுதல்
17. சேவை மையம் வரி வசூல் மையஙகளை கணினி மூலம் செயல்படுத்துதல்.
18. வார்டு குழு அலுவலகஙகளில் உள்ள கணினி பணிகள்
19. தேர்தல் பணிகள்

மேற்படி துறை அலுவல்களை சிறப்புடன் மேற்கொள்ள அடியிற்கண்டவாறு ஏற்கனவே உள்ள பணியிடஙகள் போக தேவையான பணியிடஙகள் புதியதாக தோற்றுவித்தால் செம்மையான முறையில் பணிகளை நடைமுறைப்படுத்த இயலும்.

| பதவியின் பெயர் | தேவைப்படும் பணியிடஙகளின் எண்ணிக்கை | ஏற்கனவே உள்ள பணியாளர் | மொத்தம் |
|---|---|---|---|
| பகுப்பாளர் | 1 | -- | 1 |

| | | |
|---|---|---|
| | (Syste m Analyst)<br>திட்ட கணினி அமைப்பாளர்<br>(Programmer) 1 -- 1<br>உதவி திட்ட கணினி அமைப்பாளர்<br>(Asst.Programmer) 3 1 4<br>புள்ளி விவரப்பதிவாளர்<br>(Data Entry Operator) 7 1 8<br><br>மேற்கண்டுள்ள பணியிடங்களை தோற்றுவிக்கவும் அதற்கான பணிவிதிகள் நிர்ணயம் செய்யவும் மேற்கண்டுள்ள பணியிடங்களை நிரப்பப்படும் போது மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களில் தகுதி உள்ளவர்களுக்கு பணி பாதுகாப்பு அளிக்கும் வகையில் முன்னுரிமை அளிக்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியாக அரசினைக் கேட்டுக்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். சி1/ 957/2015 | |
| | 17)2015–2016ம் ஆண்டில் இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு தேவையான பதிவேடுகள் படிவஙகள் மற்றும் எழுதுபொருட்கள் வாஙகவும் மற்றும் அச்சிட்டு பெறவும் உத்தேச செலவுத்தொகை ரு 30.00 லட்சம் செலவாகும். இச்செலவினத்தை மாநகராட்சி 2015–2016ம் ஆண்டிற்குரிய பொது நிதியில் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு</u><br><br>1)அனுமதிக்கலாம்<br><br>2)அவசர அவசியம் கருதி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள், படிவஙகள் மற்றும் எழுது பொருட்களை கூட்டுறவு நிறுவனஙகளில் வாஙகவும் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>சி4/0089/2015 | 55) அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| | 18)தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 17.10.2014ம் தேதிய ந.க.எண். டி3/5824/2014 கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம் தேவர் மகா சபை சிலை அமைப்புக்குழு பொது செயலாளர் திரு.அ. அருள்ராஜ் என்பவர் 3வது மைல் மேம்பாலம் அருகில் ஏற்கனவே உள்ள பசும்பொன் முத்துராமலிஙகத்தேவரின் திருஉருவச்சிலையை அகற்றிவிட்டு அவ்விடத்திற்கு அருகில் சொந்த செலவில் வெண்கலச்சிலை அமைக்க அனுமதி கோரியுள்ளது தொடர்பாக மாநகராட்சி சார்பில் சிலை அமைவது குறித்து தீர்மானம் நிறைவேற்றி மாநகராட்சி தீர்மானத்துடன் அறிக்கை செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>பாளைரோடு மேற்கு 3வது மைல் நிலையிலுள்ள பசும்பொன் முத்துராமலிஙகத் தேவர் திருஉருவச்சிலை அமைந்துள்ள இடம் வார்டு C பிளாக் 43 நகரளவு எண் 1ல் 0.800 ச.மீ. பரப்பளவில் ஹார்பர் ரயில்வே புறம்போக்கு நிலத்தின் ஒரு பகுதியில் அமையப்பெற்றுள்ளது. மேற்படி இடத்தில் ஏற்கனவே உள்ள முத்துராமலிஙகத் தேவரின் திருஉருவச்சிலையை அகற்றிவிட்டு மேற்படி இடத்தில் சொந்த செலவில் வெண்கலச்சிலை அமைப்பதற்கு மாவட்ட காவல் துறை மற்றும் இரயில்வே துறையினரிடமிருந்து பெறப்படும் தடையின்மை சான்று மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் பசும்பொன் முத்துராமலிஙகத்தேவர் சிலை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியர் வழியாக அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | 56) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு –** மாவட்ட ஆட்சியர் வழியாக அரசுக்கு பிரேரணை அனுப்ப அனுமதிக்கலாம்.<br><br>எப்1/009554/2014 | |
| | 19)இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சாலைகள் TURIP 2014–2015 சிப்பம் எண். 1ல் கண்டுள்ளபடி சாலைகள் சீரமைக்கும் பணிக்கு 13/2/2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 19.02.2015 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது மேலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைப்புள்ளி உறை 24.02.2015 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) மெசர்ஸ் இமானுவேல் அன்கோ. மதிப்பீட்டை விட 7.71 % அதிகம் (ரூ.5,22,26,820/–)<br>2) திருபி. ஜெபர்சன் சாமுவேல்ராஜ் மதிப்பீட்டை விட 9.67 % அதிகம் (ரூ.5,31,77,723/–)<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் மெசர்ஸ் இமானுவேல் அன்கோ (மதிப்பீட்டை விட 7.71 % அதிகம்) (ரூ.5,22,26,820/–) அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.90 % (ரூ.5,0,866,467/–) அதிகம் கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் 2.7.2 ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00% அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 4.90% அதிகம் கொடுத்ததை மாமன்றத்தில் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். மதிப்பீட்டை விட கூடுதல் தொகையை பொதுநிதியில் செலவு செய்யலாம்.<br>இ1/4465/14 | 57) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | 20) இம்மாநகராட்சி பராமரிப்பில் உள்ள சாலைகள் TURIP 2014–2015 சிப்பம் எண். 2ல் கண்டுள்ளபடி சாலைகள் சீரமைக்கும் பணிக்கு 13/2/2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு 19.02.2015 அன்று தொழில்நுட்ப கமிட்டிக்கு பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது மேலும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைப்புள்ளி உறை 24.2.2015 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.<br><br>1) திரு.வே. தஙகராஜ். மதிப்பீட்டை விட 7.71 % அதிகம் (ரூ.3,99,44,084/–)<br>2) திரு I. ஜெயசீலன் மதிப்பீட்டை விட 10.49 % அதிகம் (ரூ.4,09,74,395/–)<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட அதிகமாக | 58) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | கொடுத்துள்ளார்கள். மேலும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.வே. தங்கராஜ். (மதிப்பீட்டை விட 7.71 % அதிகம்) (ரூ.3,99,4,4084/–) அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் மதிப்பீட்டை விட 4.94 % அதிகம் (ரூ.3,89,17,672.90) கொடுத்துள்ளார். மேற்கண்ட பணிகள் உடன் செய்யவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு பொறியியல் கையேடு சேப்ட்டர் II எண் 2.7.2 ல் பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு மதிப்பீட்டை விட 5.00% அதிகம் கொடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மதிப்பீட்டை விட 4.94% அதிகம் கொடுத்ததை மாமன்றத்தில் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம். மதிப்பீட்டை விட கூடுதல் தொகையை பொதுநிதியில் செலவு செய்யலாம்.<br><br>இ1/4465/14 | |
| | **21)**இம்மாநகராட்சி மேற்கு மண்டல பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டி.எண். 69 ஏ.எச்.1513 டம்பர் பிளேசர் வாகனத்தின் தகுதி சான்று 14–11–2014ம் தேதியுடன் முடிவடைந்ததால் தகுதி சான்று பெறுவதற்காக வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு மேற்படி வாகனம் டாடா மோட்டார் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான பி.ஆர்.ஆர். மோட்டார்ஸ் 1/1–5 பாளையங்கோட்டை ரோடு கோரம்பள்ளம் என்ற நிறுவனத்தில் பழுது பார்ப்பு பணிகள் முடிக்கப்பட்டு ரூ. 1,10,248/– பட்டியல் தொகை சமர்ப்பிக்கப்பட்டது பொது சுகாதார பிரிவில் குப்பை அள்ளும் பணிக்கு மேற்படி வாகனம் பயன்படுத்தப்பட்டு வருவதால் அவசர அவசியம் கருதி மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மேற்படி செலவினத்தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** பொது சுகாதார பிரிவின் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்படி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ1/0317.2014<br><br>மே.ம | 59) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **22)**இம்மாநகராட்சியின் கிழக்கு மண்டலத்திற்கு ஒதுக்கப்பட்ட கனரக வாகனங்களில் டிஎன்.69 ஏஎப் 8403 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று பெறுவதற்கும் மேற்படி வானத்தில் பழுதூக்கியில் ஏற்பட்ட பழுதினை சரி செய்யவும் ரூ 1,29,600/– (ஒரு இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து அறுநூறு மட்டும்) அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/1768/2014/கிம | 60) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **23)**இம்மாநகராட்சிப் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகன மேடையை பராமரிக்க நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்குதுறை (ந.நி.3) அரசாணை எண்.(நிலை) 228 நாள் 13.11.2008இல் தனியார் அறக்கட்டளை மற்றும் தனியார் நிறுவனகளுக்கு அனுமதி அளிப்பது குறித்து ஆணை பிறப்பித்துள்ளது.<br><br>எனவே இம்மாநகராட்சிப் பகுதியில் மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான கிராம எண். 28 புல எண். 116/1 மற்றும் 116/3 என்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள எரிவாயு தகன மேடையை பராமரிக்க விருப்பம் தெரிவித்து வரப்பெற்ற | 61) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஸ்ரீசக்தி பவுண்டேசன், இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் , நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அவ்வப்போது வகுக்கும் விதிமுறைகளுக்கும் வழிகாட்டுதல் நெறிமுறைகளுக்கும் மற்றும் இதர சட்ட விதிமுறைகளுக்கும் உட்பட்டு அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள விபரப்படி மேற்கண்ட ஸ்ரீசக்தி பவுண்டேசன், இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) எரிவாயு தகன மேடையை பராமரிக்க மூன்று ஆண்டுகளுக்கு அனுமதி வழஙகுவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>மேட்டுப்பட்டி (திரேஸ்புரம்) பகுதி எரிவாயு தகன மேடையை மூன்று ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளஅரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும், அவ்வப்போது நடைமுறையில் வகுக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டும் ஸ்ரீசக்தி பவுண்டேசன் இராமநாதபுரம் என்ற நிறுவனத்திற்கு வழஙகுவது குறித்து மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>இ1/13075/2011 | |

**24)**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை முதன்மை செயலாளர் மற்றும் தலைவர் அவர்களின் தலைமையில் 05.11.2014ஆம் தேதி நடைபெற்ற உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புநிதி மற்றும் இயக்குதல் பராமரிப்பு இடைவெளி நிரப்பு நிதி 2014–2015க்கான பொதுக்குழு கூட்ட நடவடிக்கைகளில் இம்மாநகராட்சிக்கு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புநிதி (INFRA GAP FILLING FUND) 2014–2015 இன் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணிகளுக்கு மான்யம் ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ .எண். | பணிகள் விபரம் | மதிப்பீடு தொகை (ரூ.இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மடத்தூர் பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 2 | அண்ணாநகர் 12வது தெரு பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 3 | லூர்தம்மாள்புரம் பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 4 | ராஜகோபால்நகர் பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 5 | அத்திமரப்பட்டி பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 6 | வார்டு 58, கக்கன்ஜிநகர் பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 7 | வார்டு எண். 54, தங்கம்மாள்புரம் பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 8 | வார்டு எண். 54 துறைமுகசாலை (பல்க் அருகில்) பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 9 | வார்டு எண். 50 ராஜபாண்டி நகர் (எம்.ஜி.ஆர் நகர்) பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| 10 | வார்டு எண். 31 ஜார்ஜ் ரோடு ,காந்தி நகர், (குருவை மைதானம் அருகில்) பகுதியில் திறந்தவெளியில் மனித கழிவுகள் கழிப்பதை தவிர்க்க கழிப்பிடம் கட்டும் பணி | 9.00 | 8.00 | 1 |
| | மொத்தம் | 90,00 | 80,00 | 10 |

எனவே மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள விபரப்படி உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்புநிதி 2014–2015இன் கீழ் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் பிரேரணையில் அனுமதிக்கப்பட்ட தொகை போக கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/1236/2015

**62)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

**25)**தூத்துக்குடி மாநகராட்சி 60 வார்டுகளை உள்ளடக்கி 25.10.2011 முதல் புதிய உள்ளாட்சி உறுப்பினர்களை தேர்வு செய்து கிழக்கு, மேற்கு, தெற்கு மற்றும் வடக்கு என.4 மண்டலங்களாக பிரித்து மண்டல தலைவர்கள் தேர்வு செய்து செயல்பட்டு வருகிறது.

மேலும் இம்மாநகராட்சி மைய அலுவலகத்தில் புதிதாக உதவி செயற் பொறியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர் ஒருவர் பணி நியமனம் செய்யப்பட்டு, மேற்படி உதவி செயற் பொறியாளர் அவர்களின் கண்காணிப்பில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட உதவி செயற்பொறியாளர் அவர்களால் மாநகராட்சியின் மண்டல பகுதிகளில் நடைபெறும் பல்வேறு திட்டப்பணிகளை ஸ்தல ஆய்வு செய்ய மாநகராட்சியில் போதிய வாகனம் இல்லாத காரணத்தினால் பணிகளில் தொய்வு ஏற்பட்டு பணிகளின் முன்னேற்றம் தடைபட்டு வருகிறது.

எனவே மேற்கண்ட பணிகள் குறித்து ஸ்தல ஆய்வு செய்ய ஏதுவாக மாநகராட்சி உதவி செயற்

**63)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

பொறியாளர் அவர்களுக்கு புதிய ஜீப் வாகனம் ஒன்று வாங்குவது மிக அத்தியாவசியமாகிறது.

மேலும் இம்மாநகராட்சிப் பகுதியில் புதிய குடிநீர் திட்டம் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் உள்ள மருதூர் அணைகட்டு பகுதியில் செயல்படுத்த பணிகள் நடைபெற்று வருகின்றன, மேற்கண்ட திட்டப் பணிக்கு வல்லநாடு தெப்பம் பகுதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேற்படி திட்டப்பணி தொடர்பாக நெடுஞ்சாலைத்துறை மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை இரயில்வே போன்ற பிற துறைகளின் அனுமதி வேண்டி சம்பந்தப்பட்ட பொறியாளர்களை நேரில் சந்திப்பதற்கும் கட்டுமான பணியின் போது பயன்படுத்தப்படும் பொருட்களின் தரம் குறித்து அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களின் சான்று பெற்றிடவும் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் குடிநீர் திட்டப்பணி தொடர்பாக மின்சாரம் தொடர்பான வல்லநாடு மற்றும் ஸ்ரீவைகுண்டம் மின்வாரிய அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும் மற்றும் தலைமை நீரேற்று நிலையம் முதல் தேசிய நெடுஞ்சாலை பகுதியில் உள்ள சுமார் 40 கி.மீ. தூரம் உள்ள குடிநீர் கசிவு மற்றும் குழாய் உடைப்புகளை சரி செய்ய வாகனம் ஒன்று மின்கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாங்குவது அத்தியாவசியமாகிறது.

எனவே மேற்கண்ட குடிநீர் திட்டப் பணியின் அத்தியாவசியம் கருதி வல்லநாடு தலைமை நீரேற்று நிலைய மின்கண்காணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உதவி ஆணையாளர் அவர்களுக்கு புதிய ஜீப் வாகனம் ஒன்றும், மாநகராட்சி மண்டல பகுதியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் ஆய்வு மேற்கொள்ள உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு புதிய ஜீப் வாகனம் ஒன்றும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வாங்கிடவும், அதற்குரிய செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**மாநகராட்சி பொது நிதியிலிருந்து இரண்டு புதிய ஜீப் வாகனம் வாங்குவதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/1237/2015

**26)**இம்மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டுத்திட்டம் ( IUDM ) 2014–15 இன் கீழ் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள சாலை பணிகள் பேவர் பிளாக் சாலை அமைத்தல் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் போன்ற 15 பணிகள் ரூ. 1134.20 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மான்யம் பெற்று பணிகளை மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**64)** அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

| வ.எண். | பணிகள் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வி.எம்.கோவில் தெரு மற்றும் இரயில்வே ஸ்டேசன் ரோடு பகுதியில் தார்சாலை புதுப்பிக்கும் பணி சண்முகபுரம் மற்றும் ரைஸ்மில் தெரு (வி.இ. ரோடு) பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் வி.எம்.கோயில் தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 69.20 |
| 2 | சிவந்தாகுளம் சந்து (மாணிக்கராஜா காலனி மற்றும் உப்பு அரவை சந்து) நயினார்விளை கிழக்கு சண்முகபுரம் வடக்கு பத்திரகாளி அம்மன் கோவில் தெரு வடக்கு ரதவீதி தொடர்ச்சி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் சிவந்தாகுளம் சந்து நயினார்விளை கிழக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 57.30 |
| 3 | திரேஸ்புரம் முனியசாமி கோவில் தெரு மற்றும் குருஸ்புரம் பகுதியில் தார்சாலை அமைத்தல், திரேஸ்புரம் தொம்மையார் காலனி பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், திரேஸ்புரம் முனியசாமி கோவில் | 73.50 |

| | | | |
|---|---|---|---|
| | தெரு மற்றும் குரூஸ்புரம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | | |
| 4 | அண்ணாநகர் 3வது தெரு மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி அண்ணாநகர் 6வது தெரு மேற்கு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், மற்றும் அண்ணாநகர் 3வது தெரு மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 70.25 | |
| 5 | தபால் தந்தி காலனி கிழக்கு மற்றும் இணைப்பு சாலை பகுதி, தபால் தந்தி காலனி 1 முதல் 12 வது தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி தபால் தந்தி காலனி கிழக்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 71.50 | |
| 6 | பாலவிநாயகர் கோவில் தெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 90.00 | |
| 7 | பிரையண்ட் நகர் 6வது தெரு முனியசாமிபுரம் ராமசாமிபுரம் போல்டன்புரம் குறுக்கு சந்து பகுதியில் தார் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 73.50 | |
| 8 | பக்கிள் ஓடை அணுகு சாலை வடக்கு (ஆண்டாள் தெரு முதல் பொன்னகரம் வரை) பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 110.00 | |
| 9 | போல்பேட்டை வடக்கு / தெற்கு பகுதியில் தார்சாலை புதுப்பிக்கும் பணி மற்றும் அன்னைதெரசா நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 65.00 | |
| 10 | சக்திவிநாயகர்புரம் 3வது தெரு, இந்திராநகர் யோகீஸ்வரர் காலனி, பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி சுந்தரவேல்புரம் 6வது தெரு பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல், மற்றும் சக்திவிநாயகர்புரம் 3வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 75.25 | |
| 11 | கணேசன் காலனி மெயின் ரோடு முதல் என்ஜிஓ காலனி ஜஙஷன் வரை மற்றும் பாரதிநகர் (குருவிமேடு) பகுதியில் தார்சாலை அமைத்தல் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 72.50 | |
| 12 | 3 சென்ட் மெயின் ரோடு முதல் செல்சீனி காலனி ஜஙஷன் கால்டுவெல் காலனி எஸ்.என். ஆர். நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 77.50 | |
| 13 | அய்யன்கோவில் தெரு மெயின் மற்றும் முஸ்லீம் தெரு பகுதியில் தார்சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 75.20 | |
| 14 | சாந்தி நகர், பாரதி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்குத்தெரு பகுதியில் தார்சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டும் பணி | 67.50 | |
| 15 | குமாரசாமி நகர் 1வது தெரு முதல் தங்கமணி நகர் வரை ஆதிபராசக்தி நகர் வேதகோவில் தெரு 1 முதல் 4வது தெரு வரை பொன்னகரம் மற்றும் சண்முகபுரம் பகுதியில் தார்சாலை பேவர் பிளாக் சாலை அமைத்தல் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலம் கட்டும் பணி | 86.00 | |
| | மொத்தம் | 1134.20 | |

மேற்கண்ட விபரப்படி 15 சாலைகளில் தார் தளம் பேவர் பிளாக் மற்றும் மழைநீர் வடிகால் சிறுபாலம் அமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ 1134.20 லட்சத்திற்கு அரசுக்கு பிரேரணை சமர்ப்பித்து மான்யம் பெற்று பணிகள் செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலக குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/4659/2014 | |
| | **27)**தூத்துக்குடி மாநகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 30.11.2014ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திரு.சி. திலகராஜ் என்பவருக்கு அன்னார் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி தொகைக்குரிய வட்டி (ம) அரசு மான்யத் தொகை ஆகியவற்றை கீழ்க்கண்ட விபரப்படி தனியருக்கு வழஙகப்பட வேண்டியது உள்ளது.<br><br>1) சிறப்பு சேமநலநிதி வட்டி தொகை — ரூ. 17193/–<br>2) நகராட்சி நிர்வாகம் (ம) குடிவழஙகல் (ந.ப.3) துறை அரசாணை (பத்தாண்டு) எண். 240 நாள் 8.8.2008ன் படி சிறப்பு சேமநலநிதி மான்யத்தொகை — ரூ. 10000/–<br>மொத்தம் — ரு 27193/–<br><br>மேற்கண்ட தொகை ரூ 27,193/–ஐ (ரூபாய் இருபத்தி ஏழாயிரத்து நூற்றி தொன்னூற்றி மூன்று மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து தனியருக்கு வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – அனுமதிக்கலாம். சி2/2935/2014 | 65) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட் டது. |
| | **28)**தூத்துக்குடி மாநகராட்சி வார்டு 32 லயன்ஸ் டவுண் பகுதியில் புதிய தார் சாலை அமைக்க தூத்துக்குடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2014–15ன் கீழ் மாவட்ட ஆடசித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அ2/4758/2014 நாள் 28.12.2014ன் படி ரூ. 24.10 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணிக்கு 18.2.2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்புநோக்குப் பட்டியல்<br><br>1) திரு.வி. தஙகராஜ் மதிப்பீட்டை விட 4.82 % அதிகம்<br>2) திருஆர்.தஙகராஜ் மதிப்பீட்டை விட 6.26 % அதிகம்<br><br>மேற்படி பணிக்குப் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு வி. தஙகராஜ் அவர்களிடம் விலை குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் மதிப்பீட்டை விட 0.17 % குறைவாக (ரூ. 22,66,663.60) கொடுத்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br><br>மேற்படி பணிக்கு ஒப்பந்தக்காரர் திரு வி. தஙகராஜ் மதிப்பீடைவிட 0.17% குறைவாக (ரூ.2266663.60) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி யை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br><br>ம.ப.எண்185/14–15<br><br>**29)**தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் JICA நிதியுதவியுடன் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை ( Mc 6) அரசாணை எண் G.O.(4D)No.3 நாள். 22.10.2012 ன் படி ரூ.282.44 கோடி மதிப்பீடு தொகையில் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பணியில் சிப்பம் I மற்றும் II பணியில் | 66) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட் டது.<br><br>67)அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக் கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | TNUIFSL குழுவினரின் ஆய்வு அறிக்கை நாள் 20.05.2015 , 21.05.2015ன் படி தன்னோட்ட மற்றும் பம்பிங குழாய்களில் "Surge anticipating" வால்வு பொருத்த அறிவுரை வழஙகியுள்ளனர். அதனடிப்படையில் மேற்படி பணிக்கு ரூ 24.95 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 25–02–2015 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்.<br><br>1) மெசர்ஸ். டெக்னோமேட்டிக்ஸ் இன்ஜினியரிங கம்பெனி– கோயம்புத்தூர் — மதிப்பீட்டை விட 0.58 % குறைவு<br>2) மெசர்ஸ். கோமதி ஏஜன்சி திருநெல்வேலி — மதிப்பீட்டை விட 3.86 % அதிகம்<br><br>பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலை குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் டெக்னோமெட்டிக்ஸ் இன்ஜினியரிங கம்பெனி நிறுவனத்தினரிடம் விலைகுறைப்பு கேட்கப்பட்டதில் அவர் மதிப்பீட்டை விட 0.79% குறைவாக (ரூ 24,50,467) கொடுத்துள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br><br>(1) மேற்படி பணி குடிநீர் திட்டத்தில் அடஙகிய பணியாக இருப்பதால் மேற்படி பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி (ரூ 24,50,467) கொடுத்துள்ள மெசர்ஸ் டெக்னோ மெட்டிக்ஸ் இன்ஜினியரிங கம்பெனி நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>(2) மேற்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி அரசு ஆணையில் வழஙகிய தொகையில் ஈடு செய்யலாம்.<br><br>213/14–15 | |
| | 30)தூத்துக்குடி மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள புதுக்கோட்டை பகுதியில் அமைந்துள்ள மாநகராட்சியின் பழுதடைந்த நிலையில் உள்ள நீர் உந்து நிலையத்தினை அப்புறப்படுத்திவிட்டு அந்த இடத்தில் புதியதாக வணிகவளாகம் கட்டத்தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 7000000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு –</u> மதிப்பீடு தொகை ரூ. 70,00,000/– மன்றம் அனுமதிக்கலாம் மேற்கண்ட செலவினத்தினை வரும் நிதியாண்டு 2015–2016 வரவு செலவு திட்டத்தில் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>இ1/1023/மே–ம/2015 | 68) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 31)தூத்துக்குடி மாநகராட்சி 15,16 வது வார்டு பகுதி சத்திரம் தெரு,தச்சர் தெரு பகுதியில்,குடிநீரில் கழிவு நீர் கலந்ததையொட்டி மேற்படி பகுதிகள் கண்டறிந்து அவற்றில் புதிய இருப்பு குழாய் மாற்றியமைக்கவும்,மேலும் ரோச் காலனி,வடக்கு காட்டன் சாலை பகுதிகளில் குடிநீர் குழாய் கழிவுகளை சரி செய்யவும் மாநகராட்சி விதி எண்.15ன் கீழ் 698,000 செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்க வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலகக் குறிப்பு –</u> மாமன்றம் பதிவு செய்யலாம் ம.ப எண்./189A/14–15<br><br>32)தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான கீழரதவீதி மாநகராட்சி திருமண மண்டபம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 2015–2018 மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழஙக தூத்துக்குடி மாமன்றத்தில் 23.01.2015 ம் தேதிய 29ம் தீர்மானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளுக்கு 23.03.2015 அன்று நடைப்பெற்ற ஏலம் | 69) பதிவு செய்யப்பட்டது |

மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஏல இனம் | பெயர் மற்றும் முகவரி | நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தப் ட்ச தொகை | கோரப்பட் ஒப்பந்தப் தொகை (ஒராண்டு |
|---|---|---|---|---|
| 1 | கீழரதவீதி மாநகராட்சி திருமண மண்டபம் வாடகை கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 1)திரு.வி.இசக்கிமுத்து த/பெ.வீரபுத்திரன் 4/33/2 வி.கே.புதூர் திருநெல்வேலி<br>2)திரு.செந்தில் கணேஷ் த/பெ.திருமலை ராஜ் 111/66/38இ சக்தி நாயகபுரம் தூத்துக்குடி | 60,000/– | 61,200/–<br>60,200/– |

மேற்கண்ட இனத்திற்கு உரிமம் வழஙகப் கோரி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.வி.இசக்கிமுத்து என்பவருக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் 2015–2018 (2015 ஏப்ரல் முதல் 2018 மார்ச்முடிய) மூன்றாண்டு தொகுப்பில் உரிமம் வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். அ1610416/2014

70) அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது.

**33)**தூத்துக்குடி மாநகராட்சிக்குச் சொந்தமான சேதுபாதை ரோடு மயானத்தில் உள்ள பனை மரஙகளின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் 2015–2018 மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் உரிமம் வழஙக தூத்துக்குடி மாமன்றத்தில் 23.01.2015 ம் தேதிய 29ம் தீர்மானத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளுக்கு 23.03.2015 அன்று நடைப்பெற்ற ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| ஏல இனம் | பெயர் மற்றும் முகவரி | நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தப் பட்ச தொகை | கோரப்பட் ஒப்பந்தப் புள்ளி தொகை (மூன்றான டுக்கு) |
|---|---|---|---|
| சேதுபாதை ரோடு மயானத்தில் உள்ள பனை மரஙகளின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் | 1)திரு.வி.இசக்கிமுத்து த/பெ.வீரபுத்திரன் 4/33/2 வி.கே.புதூர் திருநெல்வேலி<br>2)திரு.செந்தில் கணேஷ் த/பெ.திருமலைராஜ் 111/66/38இ சக்தி நாயகபுரம் தூத்துக்குடி | 12,000/– | 12,900/–<br>12,100/– |

மேற்கண்ட இனத்திற்கு உரிமம் வழஙகப் கோரி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.வி.இசக்கிமுத்து என்பவருக்கு மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில்

71) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | 2015–2018 (2015 ஏப்ரல் முதல் 2018 மார்ச் முடிய) மூன்றாண்டு தொகுப்பில் உரிமம் வழஙக மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16.10416/2014 | |
| | **34)**தூத்துக்குடி மாநகராட்சி பராமரிப்பில் உள்ள வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திற்கு செல்லும் மண் சாலையை தார் சாலையாக அமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.21,50,000/– மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவு தொகை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்யலாம்.<br><br>ம.ப எண்.287/14–15 | 72) அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது. |
| | **35)** தூத்துக்குடி மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகருக்கு தண்ணீர் வரும் 600 mm psc கசிவுகள் மஙகளகிரி ,மவுண்ட்டன் மில் அருகிலும் 400 மீ.மீ psc குழாய் கசிவுகள் வாகைகுளம் மற்றும் மறவன் மடம் பகுதியிலும் சரி செய்ய மாநகராட்சி விதி எண் 15 ன் கீழ் ரூ.69,534/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம்<br><br>ம.ப.எண்.212A/14-15 | 73) பதிவு செய்யப்பட்டது |
| | **36)**தூத்துக்குடி மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் அமைந்துள்ள இரண்டு நீர் சேகரிக்கும் கிணறுகளை சுற்றி அமைந்துள்ள மணல் மேடுகளை அப்புறப்படுத்தி தண்ணீர் ஒட்டப்பாதை ஏற்படுத்த மாநகராட்சி விதி எண்15ன் கீழ் ரூ.53,760/– செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் பதிவு செய்யலாம் ம.ப.எண்.212B/14-15 | 74) பதிவு செய்யப்பட்டது |
| | **37)**இம்மாநகராட்சியின் 2015–2016 ம் ஆண்டின் உத்தேச வரவு மற்றும் செலவு மதிப்பீடுகள் மற்றும் 2014–2015 ம் வருடத்திய திருத்திய வரவு மற்றும் செலவு மதிப்பீடுகள் கீழ்க்காணும் நிதிகளுக்கு (1)வருவாய் (ம) மூலதன நிதி (2) குடிநீர் (ம) வடிகால் நிதி மற்றும் (3)கல்வி நிதி ஆகிய வகைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டி மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம் பி1/629/2015 | 75) அலுவலக குறிப்புபடி ஒப்புதல் அளிக்கப்பட்டது. |

மாமன்றம், தூத்துக்குடி
நாள் : 03 .2015

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி